www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# காலாண்டுத் தேர்வு - 2024

வகுப்பு : 11
காலம் : 3.00 மணி

## பொதுத்தமிழ்

பதிவு எண் :
மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்: (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

1. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ______ என்பதாகும்.
   (அ) தாள் (ஆ) நூல் (இ) எழுத்தாணி (ஈ) ஓலை
2. ஒரு திரவ நிலையில் நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிற போது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.
   (அ) மொழி என்பது திட திரவ நிலையில் இருக்கும்
   (ஆ) பேச்சுமொழி எழுத்துமொழியைத் திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.
   (இ) எழுத்துமொழியைவிட பேச்சுமொழி எளிமையானது.
   (ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.
3. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு
   (அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி (ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்
   (இ) வினையெச்சம், வினைத்தொகை (ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை
4. ஜெயமோகன் எழுதிய குறும் புதினம் எது?
   (அ) வாடிவாசல் (ஆ) யானை டாக்டர் (இ) பிம்பம் (ஈ) ஆறாம் திணை
5. அகநானூற்றில் உள்ள பிரிவுகள் ________.
   (அ) இரண்டு (ஆ) மூன்று (இ) நான்கு (ஈ) ஐந்து
6. 'நிழல்போலத் தொடர்ந்தான்' – இது எவ்வகை உவமை?
   (அ) வினை (ஆ) பயன் (இ) வடிவம் (ஈ) உரு
7. சரியான விடையைத் தெரிவு செய்க.
   (அ) தமிழ் இதழியல் துறையில் முதன்முதலாகக் கருத்துப்படங்களை வெளியிட்டவர் பாரதி.
   (ஆ) தமிழ் இதழ்களில் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் ஆகியவற்றை முதன்முதலாகக் குறித்தவர் பாரதி.
   (இ) பெண் விடுதலைக்குப் பாடுபட்ட பாரதி பெண்களுக்காகத் தமது 'சித்திராவளி' இதழில் குறள் வெண்பாக்களை எழுதியுள்ளார்.
   (ஈ) பாரதி 'இந்தியா' இதழைச் சிவப்பு வண்ணத்தில் வெளியிட்டார்.
   (அ) அ, ஆ, இ – சரியானவை (ஆ) ஆ, இ, ஈ – தவறானவை
   (இ) அ, இ, ஈ – தவறானவை (ஈ) அ, ஆ, ஈ – சரியானவை
8. நமக்குக் கிடைக்கும் தமிழ் நூல்களில் காலத்தால் பழமையானது ________
   (அ) திருக்குறள் (ஆ) நன்னூல் (இ) தொல்காப்பியம் (ஈ) புறநானூறு
9. வானம் வசப்படும் என்னும் நூலுக்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் ________
   (அ) சி.சு.செல்லப்பா (ஆ) பிரபஞ்சன்
   (இ) இந்திரன் (ஈ) ஜெயமோகன்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

(அ) வெள்ளிவீதியார் – (1) புறநானூறு

(ஆ) அண்ணாமலையார் – (2) சி.சு.செல்லப்பா

(இ) வாடிவாசல் – (3) குறுந்தொகை

(ஈ) இளம்பெருவழுதி – (4) காவடிச் சிந்து

(அ) அ–3, ஆ–2, இ–1, ஈ–4 (ஆ) அ–3, ஆ–1, இ–2, ஈ–4

(இ) அ–3, ஆ–2, இ–4, ஈ–1 (ஈ) அ–3, ஆ–4, இ–2, ஈ–1

11. பிழையான தொடரைக் கண்டறிக.

(அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.

(ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.

(இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.

(ஈ) யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரினை வாசனைமூலம் அறிய முடியும்.

12. பகுபத உறுப்புகளில் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?

(அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்

(ஆ) பகுதி, இடைநிலை, சாரியை

(இ) பகுதி, சந்தி, விகாரம்

(ஈ) பகுதி, விகுதி

13. தவறான இணையைத் தேர்வு செய்க.

(அ) கடல் + அலை – உயிர் + மெய் (ஆ) மொழி + ஆளுமை – உயிர் + உயிர்

(இ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர் (ஈ) மண் + வளம் – மெய் + மெய்

14. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து _________ நினை.

(அ) முகக்குறிப்பை அறிந்தவரை (ஆ) எண்ணியதை எண்ணியவரை

(இ) மறதியால் கெட்டவர்களை (ஈ) சொல்லேர் உழவரை

## பகுதி – II

### பிரிவு – 1

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×2=6

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

16. 'ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின' – தொடரின் பொருள் யாது?

17. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?

18. "இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள்." – எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?

### பிரிவு – 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×2=4

19. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?

20. மலை, குன்று இவற்றின் பொருள் வேறுபாடு யாது?

21. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.

### பிரிவு – 3

எவையேனும் **ஏழனுக்கு** விடை தருக. 7×2=14

22. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

பொரி, பொறி

23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

(அ) மெலிந்து (ஆ) இரங்கி

24. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

(அ) கால்நடை **(அல்லது)** (ஆ) எட்டுவரை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

25. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
(அ) தண்டுடை (ஆ) சிறுகோல்
26. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கிடைக்கும்.
27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்
28. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
29. கலைச்சொல்லாக்கம் தருக.
(அ) College (ஆ) Prefix

**குறிப்பு: செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.**
வழக்கறிஞராகத் தொழில் புரிவதைவிடத் தமிழின்பத்தில் திளைப்பதையே டி.கே.சி. விரும்பினார். – **விடைக்கேற்ற வினா அமைக்க.**

30. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை.

## பகுதி – III

### பிரிவு – 1

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

31. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.
33. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.
34. "கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது" – யாது?

### பிரிவு – 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.
36. 'மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
37. "நேரடி மொழி" என்பதை நும்பாடப் பகுதிவழி நின்று விளக்குக.
38. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.

### பிரிவு – 3

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×4=12

39. (அ) உவமை அணியைச் சான்று தந்து விளக்குக.

**(அல்லது)**

(ஆ) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.
– இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

40. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)
(அ) எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும் _______
(ஆ) அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் _______
(இ) கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம் _______
(ஈ) அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவே தான் _______



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

41. ய், வ், ஞ், ட், ற், ந் – மெய்களுக்கான வேற்றுநிலை, உடனிலை மெய்ம்மயக்கங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

42. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.)

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை யற்றிடும் காணீர்.

– பாரதியார்

43. தமிழாக்கம் தருக.

(அ) Knowledge rules the world.

(ஆ) Education is the most powerful weapon, which you can use to change the world.

(இ) Culture does not make people. people make culture.

(ஈ) Winners don't do different things, they do things differently.

**குறிப்பு: செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.**

பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.

(அ) போலீஸ் (ஆ) சங்கீதம் (இ) விசா (ஈ) ரசிகர்

## பகுதி – IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44. (அ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' – இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.

45. (அ) "இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன" – கூற்றினை மெய்ப்பிக்க.

(அல்லது)

(ஆ) 'பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

46. (அ) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப் பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

(அல்லது)

(ஆ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

## பகுதி – V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 4+2=6

(அ) "ஆக்கியோன்........" எனத் தொடங்கும் நன்னூல் நூற்பாவை எழுதுக.

(ஆ) "நன்று" என முடியும் குறளை எழுதுக.

***************



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com